தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

31/05/2025

தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவை ஐக்கியராச்சியக் கிளையின் கலை பண்பாட்டுப் பிரிவினால் நடாத்தப்படும்
“**செங்காந்தள் கலைச் சமர் 2025**”

## இசை

**பிரிவு அ : 04 - 05 அகவை (01/09/2020 – 31/08/2021)**

பாடியவர் : திருநாவுக்கரசர்
பண் : காந்தாரபஞ்சமம்
நேரம்: 03 மணித்துளிகள்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

அல்லது
கிறித்தவப் பாடல்:
ஒரு பாடல்
ஒரு பாடல் நான் பாடுவேன்
மன்னன் உந்தன் கருணையை
எண்ணி எண்ணி வியந்து
மகிழ்ந்து நன்றிப் பாடல் நான் பாடுவேன்

ஒரு நாளில் நீ செய்த நன்மைகளை
சொல்ல நினைத்தால்



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

வாழ் நாளே போதாதையா
சொல்லியும் தீராதையா
நன்றி சொல்வேன் நாளெல்லாம்
உந்தன் பிள்ளையாய் நான் வாழ்வேன்

அல்லது

முகமதியர் பாடல் :
எழுதியவர்:-செங்கதிரவன்

இணையில்லா இறைவனே
எல்லோருக்கும் ஒருவனே
கருணையை வேண்டுகின்றேன்
யா அல்லாஹ்
மறை தந்த நாயனே
மகமூர் நேசனே
உன் புகழ் பாடுகின்றேன்
யா அல்லாஹ்
பூமி என்பதே ஓர் பள்ளிவாசலே
கோடி ஜீவனும் அதில் தஞ்சமாகுமே
தவமும் வாரமும் எதுவும் நீதானே
தினமும் உனையே பணிவாய் தொழுவேனே



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

அல்லது

ஈழத்து கவிஞரின் கவிவரிகள்:
எழுதியவர் : ச. அருளானந்தம்
நூல் : மனதுக்கினிய பாட்டு
மழைத்துளி

சின்னச் சின்னத் தூறலாய்
சிந்தும் வான மழைக் கொடி
பின்னி ஒன்றாய்ச் சேர்ந்துமே
மண்ணில் ஊர்ந்து போகுது

பள்ளம் பார்த்து பதுங்குது
பாய்ந்து குளமாய் ஆகுது
வெள்ளம் சேர்ந்து கொண்டதும்
மிதந்து கப்பம் ஆடுது

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

**பிரிவு ஆ : 05 - 06 அகவை (01/09/2019 – 31/08/2020)**

பாடியவர் : திருஞானசம்பந்தர்
பண் : காந்தாரம்
நேரம்: 03 மணித்துளிகள்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

திருச்சிற்றம்பலம்

அல்லது

கிறித்தவப் பாடல்

அஞ்சாதே அஞ்சாதே நான் என்றும் உன்னோடு
எந்தத் துன்பம் வந்தாலும் என் அன்பு உன்னோடு (2)
குன்று அசையலாம் குகைகள் பெயரலாம்
உலகம் முழுவதும் உன்னை வெறுக்கலாம்
எந்த நிலை தான் ஆனாலும் எந்தன் அன்பு மாறாது
அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன் -2
அன்னை குழந்தையை அணைக்க மறப்பாளோ
சின்ன துன்பமும் நெருங்க விடுவாளோ
அன்னை உன்னை மறந்தாலும் உன்னை நானோ மறவேனே
அஞ்சாதே அஞ்சாதே உன்னை நான் காப்பேன் - 2



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

அல்லது

முகமதியர் பாடல் :

எழுதியவர் :- எச்.எப்.ரிஸ்னா

அருள்மறையாம் அல்குர்ஆன் அல்ஹாவின் அருட்கொடையாம்
உலகிலுள்ள அனைத்திலுமே உயர்ந்ததொரு பொக்கிஷமாம்

எழுத்து ஒன்றை ஓதிட்டால் பத்து நன்மை கிடைத்திடுமே
மறையோதும் வீடுகளில் பரகத்து பெருகிடுமே
மறையதனை மனைமிட்டால் மகிமையும் உயர்ந்திடுமே
விளக்குகளின் தூஆக்களும் நிறைவாக கிடைத்திடுமே

அல்லது

ஈழத்து கவிஞரின் கவிவரிகள்: மகாகவி உருத்திரமூர்த்தி
மூலம்: பதினொரு ஈழத்து கவிஞர்கள் (1984)
மீனவப்பாடல்
புதியதொரு வீடு என்ற பாநாடகத்தின் இசைப் பாக்கள்

ஏலேயேலோ …. தத்தைதாம்
ஏலேயேலோ…..
ஏலேயேலோ …. தத்தைதாம்
ஏலேயேலோ….

சிறுநண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை இதை வந்து கடல் கொண்டு போகும்.
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று காணும்.

ஏலேயேலோ …. தத்தைதாம் ஏலேயேலோ…..


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

ஏலேயேலோ …. தத்தைதாம் ஏலேயேலோ….

**பிரிவு இ: 06 - 07 அகவை (01/09/2018 – 31/08/2019)**
பண் : திருக்குறுந்தொகை
பாடியவர் : திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

அருளியவர்: சேக்கிழார்
உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவுலாவியன் நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

அல்லது
கிறித்தவப் பாடல்:
ஒரு பாடல்
அடிமை நான் ஆண்டவரே - என்னை
ஆட்கொள்ளும் என் தெய்வமே
தெய்வமே தெய்வமே
அடிமை நான்
என் உடல் உமக்குச் சொந்தம் -இதில்
எந்நாளும் வாசம் செய்யும்

உலக இன்பமெல்லாம் - நான்
உதறித் தள்ளி விட்டேன்
பெருமை செல்வமெல்லாம் - இனி
வெறுமை என்றுணர்ந்தேன்

வாழ்வது நானல்ல - என்னில்
இயேசு வாழ்கின்றீர்

என் பாவம் மன்னித்தருளும் - உம்
இரத்தத்தால் கழுவிவிடும்
முள்முடி எனக்காக - ஐயா
கசையடி எனக்காக
என் பாவம் சுமந்து கொண்டீர் - என்
நோய்கள் ஏற்றுக் கொண்டீர்

அல்லது
முகமதியார் பாடல் :
ஸூப்ஹான மௌலானா
வானம் படைத்தோனே வையம்படைத்தோனே வணக்கத்திற்குரியோனே
வல்லோனே அல்லாஹ்வே

அன்பின் ஊற்று நீயே அருளின் வடிவம் நீயே
அகத்தில் நிறைந்தவனே அதிகமுனை நினைப்போமே
மனிதன் உன்னை மறந்தால் மண்ணை வணங்கிடுவான்
மரத்தை வணங்கிடுவான் மகிமையை இழந்திடுவான்

சுமைகள் போக்கிடுவாய் சுகத்தை தந்திடுவாய்
சுவனம் அருளிடுவாய் சுபஹான மவ்லானா

அல்லது

ஈழத்து கவிஞரின் கவிவரிகள்:
எழுதியவர் : ச. அருளானந்தம்
நூல் : மனதுக்கினிய பாட்டு
சோடிக் காளைகள்

இரண்டு காளை மாடுகள்
இழுக்க வண்டி உருளுது
புரண்டு எழும்பும் புழுதியும்
புயல் பரப்பி பெருகுது

வண்டில் சில்லு கடகடக்க
மாட்டு வண்டி வருகுது
சுண்டு வில்லின் அம்பு போல
துள்ளி விரைந்து வருகுது

காளை வாயில் நுரையெழும்ப
காற்றாய் விரைந்து வருகுது
வாலைக் கிளப்பி வாளிப்பாய்ந்து
வடிவாய் வண்டி இழுக்குது

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

**பிரிவு ஈ : 07 - 08 அகவை (01/09/2017 – 31/08/2018)**
பாடியவர் : திருஞானசம்பந்தர்
பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்
தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக் காடுடைய
சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன் ஏடுடைய மலரான்
முனைநாள் பணிந்து ஏத்தஅருள் செய்த பீடுடைய
பிரமாபுரமேவிய பெம்மான்இவன் அன்றே.
அருளியவர் : சேக்கிழார்
கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பரவியோ மமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி
திருச்சிற்றம்பலம்

அல்லது
கிறித்தவப் பாடல்:
அம்மை அப்பன்

அம்மை அப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உன் உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் -நான்
மாண்ட பின்பும் உன்னில் உயிர்ப்பது நிரந்தரம்
நிரந்தரம் நிரந்தரம் நீயே நிரந்தரம்

தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எனக்கு நீயே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீயே நிரந்தரம் - நான்


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

சாயும் போதும் காப்பது நீயே நிரந்தரம்
நிரந்தரம் நிரந்தரம் நீயே நிரந்தரம்

அல்லது

முகமதியார் பாடல் :
எழுதியவர் :- ரூஹுல் ஹக் அதாயி

அல்லாஹூ யா அல்லாஹ் ......... அல்லாஹூ யா அல்லாஹ்
அல்லாஹூ யா அல்லாஹ் ......... அல்லாஹூ யா அல்லாஹ்

இன்ப ராகமாய் இதயம் பாடுதே
இறுதி தூதரின் வருகை தேடியே
இளமை முதுமையாய் மாறி போகுதே
காட்சி கண்ணிலே காணவில்லையே

குழந்தை அழுத நோக்கம்
தாயின் அமுதை நாடியே
கவிப்பாவை பாடும் நோக்கம்
நபியின் அழகைக் காணவே

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

அல்லது

ஈழத்து கவிஞரின் கவிதை :
நாட்டார் பாடல்
தாளம்:சதுஸ்ர ஏகம் (திஸ்ர ஏகம்)

தன்னானே தன்னானே
தன்னானே தங்கம்
தன்னானே தன்னானே
தன்னானே தங்கம்

தையும் பிறந்ததம்மா
தங்கம் பொலிந்ததம்மா
நெல்லும் விளைந்ததம்மா
தேசம் மகிழ்ந்ததம்மா - (தன்னானே)

மாம்பூ மணந்ததம்மா
வாழைதார் போட்டதம்மா
தேம்பால் சொரிந்ததம்மா
தேசம் மகிழ்ந்ததம்மா - (தன்னானே )

குயிலோ கொஞ்சுதம்மா
குழலோசை கேட்குதம்மா
மயில் போல் நடம் புரிவோம்
மங்கலப் பொங்கல் உண்போம்
(தன்னானே)


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

**பிரிவு உ : 08 - 09 அகவை (01/09/2016 – 31/08/2017)**

பண்: புறநீர்மை
பாடியவர்: திருஞான சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழலர்பால் நீக்கி நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங்கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே.

அருளியவர்: சேக்கிழார்
வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

திருச்சிற்றம்பலம்

அல்லது

கிறித்தவப் பாடல்:
காணிக்கை தந்தோம் கர்த்தாவே
ஏற்றுக்கொள் எம்மையே இப்போதே
கண்கொண்டு பாரும் கடவுளின் மகனே
காணிக்கை யார் தந்தார் நீர் தானே
நாங்கள் தந்த காணிக்கை எல்லாம்
இரட்சகர் கொடுத்தது
மேகம் சிந்தும் நீர்த்துளி எல்லாம் பூமி கொடுத்தது
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்
ஆகாயம் மாறும் கடவுளின் மகனே
ஆனாலும் உன் அன்பு மாறாது


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

ஆலயத்தின் வாசல் வந்தால் அழுகை வருகுதே
ஆனமட்டும் அழுதுவிட்டால் அமைதி பெருகுதே
கண்ணீரைப் போல காணிக்கை இல்லை
கண்கொண்டு பாரும் கடவுளின் மகனே
கண்ணீரின் அர்த்தங்கள் நீர் தானே
காணிக்கை கொண்டு செலுத்தி வந்தோம்
கருணை கிடைக்கட்டும்
தேவன் தந்த ஜீவன் எல்லாம் புனிதம் அடையட்டும்
எம் அண்டை வாரும் பாவங்கள் தீரும்
ஏன் என்று கேளும் இறைவனின் மகனே
எம்மையே காணிக்கை தந்தோமே

அல்லது
முகமதியார் பாடல் :
எழுதியவர் :- ரிஸ்வான்

யா ரசூலே யா ஹபீபே
ரஹ்மதுல் லில் ஆலமீன்
யா முசம்மில் யா முதஸ்ஸிர்
கருணையாளர் முஹம்மதே
தாஹா நபியே அல்-அமீனே
ஹாஷிம் குலத்தின் செல்வமே
விண்ணுலகம் சென்ற அற்புத நபியே
மர்ஹபா யா முஸ்தஃபா
யா ரசூலே யா ஹபீபே
கருணையாளர் முஹம்மதே

பாரசீகமும் ரோமும் ஆண்ட


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

காலத்தில் நீர் பிறந்தது
ஆட்டை மேய்த்த முஹம்மதே நீர்
உலகை ஆண்டதும் நடந்தது
ஹபஷா மன்னரின் மாளிகை
எங்கும் தூய இஸ்லாம் நுழைந்தது
கிஸ்ரா நகரமும் மத்யன் மாளிகையும்
உங்கள் முன்னே பணிந்தது
ஏழைகளுடனே சுவனம் செல்லும்
முஹம்மதே நீர் வாழ்கவே
யா ரசூலே யா ஹபீபே

அல்லது
ஈழத்துக் கவி
வித்துவான் க வேந்தனார்

காலை தூக்கி கண்ணில் ஒற்றிக்
கட்டி கொஞ்சும் அம்மா
பாலைகாய்ச்சி சீனி போட்டுப்
பருக தந்த அம்மா

புழுதி துடைத்து நீரும் ஆட்டி
பொட்டும் வைக்கும் அம்மா
அழுதிடாமல் பள்ளிக்கூடம்
அணைத்துச் செல்லும் அம்மா

அள்ளிப் பொருளை கொட்டி சிந்தி
ஆழிவு செய்த போதும்
பிள்ளை தனத்தால் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா

பள்ளிக்கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளி குதிக்கும் என்னை தூக்கித்
தோளில் போடும் அம்மாஅல்லது

அல்லது
பின்னணி இசை:
நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
நாட்டில் அடிமை விலங்கு தெறிக்கும்

பாரில் தமிழ் மண் வீரம் படைக்கும்
பகைவனோடும் சேதி கிடைக்கும்
போரில் வெற்றி முரசும் முழங்கம்
புலிகள் கழுத்தில் மாலை குலுங்கும் (நம்புங்கள் )

கூண்டுப் பறவை சிறகை விரிக்கும்
குனிந்த முகங்கள் நிமிர்ந்து சிரிக்கும்
மாண்ட வீரர் கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில் தமிழ் மண் குளிக்கும் (நம்புங்கள் )

வானம் நமது கொடியை அழைக்கும்
மாற்றார் முகத்தில் நாணம் முளைக்கும்
மானம் நமக்கோர் மகுடம் வழங்கும்
மண்ணில் நமது பெயரும் விளங்கும் (நம்புங்கள்)

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

**பிரிவு ஊ : 09 - 10 அகவை (01/09/2015 – 31/08/2016)**

நேரம்: 05 மணித்துளிகள்
பண்: இந்தளம்
பாடியவர்: சுந்தரமூர்த்தி

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடீபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.

அருளியவர் : சேக்கிழார் புராணம்
நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்

திருச்சிற்றம்பலம்

அல்லது

கிறித்தவப் பாடல்:
தலைவா உனை வணங்க என் தலைமேல் கரம் குவித்தேன்
வரமே உனைக் கேட்க நான் சிரமே தாள் பணிந்தேன்
அகல்போல் எரியும் அன்பு அது
பகல் போல் மணம் பெறவும்
நிலையாய் உனை நினைத்தால் நான்
மலையாய் உயர்வடைவேன்
நீர் போல் தூய்மையையும் என்
நினைவினில் ஓடச் செய்யும்


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

சேற்றினில் நான் விழுந்தால் என்னை
சீக்கிரம் தூக்கிவிடும்
ஞானத்தில் சிறந்தது என்ன உயர்
தானத்தில் சிறந்தது என்ன
தாழ்மையில் மனமில்லையோ என்
ஏழ்மையை என் சொல்வேன்

அல்லது

முகமதியார் பாடல் :
எழுதியவர் :- மொஹமட் அஹ்ஸான் பிலாலி

அல்லாஹ்..........அல்லாஹ்........
அல்லாஹ்...........அல்லாஹ்.........
அல்லாஹ்..........அல்லாஹ்.........
அல்லாஹ்..........அல்லாஹ்....
அல்லாஹ்....................
அல்லாஹ்..................
யா ஹன்னான்  யா மன்னான்
யா தய்யான் யா சுப்ஹான்

அல்லாஹ்வின் அருளை தேடும் மனம் புகழ்ந்தே
தினம் தினம் பாடும் வளமளிக்கும் வல்லோன்
அல்லாஹ் நலம் காக்கும் தூயோன் அல்லாஹ்
அகம் பார்க்கும் எங்கள் இறைவா
என் மறைவை நீயே அறிவாய்

அல்லாஹ்வின் அருளை தேடும் மனம் புகழ்ந்ததே
தினம் தினம் பாடும் வளமளிக்கும் வல்லோன்

அல்லாஹ் நலம் காக்கும் தூயோன் அல்லாஹ்

உண்டான இந்த உலகம்
நில்லாமல் தினமும் சுழலும்
இவ்வுலகில் ஒவ்வொரு அசைவும்
உள்ளமையாலே இயங்கும்

அல்லது

ஈழத்து கவிஞரின் கவிவரிகள்:
கவிவரிகள்: கவிஞர் நீலவாணன்
மூலம்: பதினொரு ஈழத்து கவிஞர்கள் ( 1984
ஓ! வண்டிக்காரா!

ஓ...ஓ...வண்டிக்காரா
ஓட்டு வண்டியை ஓட்டு
போவோம் புதிய நகரம் நோக்கி
பொழுது போம் முன்னோட்டு

ஓ...ஓ...வண்டிக்காரா

காவில் பூவில் கழனிகளெங்கும்
காதல் தோயும் பாட்டு
நாமும் நமது பயணம் தொலைய
நடந்து செல்வோம் கூட்டு.

ஓ...ஓ...வண்டிக்காரா

பனியின் விழிநீர்த் துயரத் திரையில்
பாதை மறையும் முன்னே

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

பிணியில் தோயும் நிலவின் நிழல் நம்
பின்னால் தொடரும் முன்னே...

ஓ...ஓ...வண்டிக்காரா

அல்லது
பின்னணி இசை
மறவர் படைதான் தமிழ் படை -குல
மானம் ஒன்றுதான் அடிப்படை
வெறிகொள் தமிழர் புலிப்படை -அவர்
வெல்வார் என்பது வெளிப்படை (மறவர் )

புதிதோ அன்று போர்க்களம் - வரும்
புல்லர் போவார் சாக்களம்
பதறிப் போகும் சிங்களம் - கவி
பாடி முடிப்பான் மங்களம் (மறவர்)

தமிழன் பண்பில் உருப்படி - அவன்
தலையும் சாய்ப்பான் அறப்படி
அமையும் தன்மை முதற்படி - பிறர்
அடக்க வந்தால் செருப்படி (மறவர்)

வீரம் வீரம் என்றாடு - நீ
வேங்கை மாற்றான் வெள்ளாடு
சீறும் பாம்பை வென்றாடு - கண்
சிவந்து நின்று போராடும் (மறவர்)


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

**பிரிவு எ : 10 - 11 அகவை (01/09/2014 – 31/08/2015)**

நேரம்:

பண்: கொல்லி

பாடியவர் : திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

பாடியவர்: மாணிக்கவாசகர்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

அருளியவர்: சேக்கிழார்.

அண்ணலே யெனையாண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின்கோலம்
நண்ணிநான் தொழநயந் தருள்புரி எனப்பணிந்தார்

திருச்சிற்றம்பலம்

அல்லது

கிறித்தவப் பாடல்:
என் தேடல் நீ

என் தேடல் நீ என் தெய்வமே
நீயின்றி என் வாழ்வு நிறம் மாறுதே - உனை
மனம் தேடுதே நீ வழி காட்டுமே!
இறைவா இறைவா வருவாய் இங்கே
இதயம் அருகில் அமர்வாய் இன்றே

ஒரு கோடி விண்மீன்கள்
தினம் தோன்றினும்
நீ இன்றி என் வாழ்வு இருள் சூழ்ந்திடும்
பிறர் அன்பை என் பணியில்
நான் ஏற்கையில்
உன் அன்பு உயிர் தந்து வாழ்வாகிடும் இறைவார்த்தையில் நிறைவாகுவேன்
மறைவாழ்வினில் நிலையாகுவேன் வழிதேடும் எனைக்காக்க நீ வேண்டுமே
இறைவா இறைவா...

அல்லது

முகமதியார் பாடல் :
எழுதியவர் :- கயல் ஆர்.எஸ்.இளவரசு

சொர்க்கத்தில் இருந்து ஹ்ருள்ஈன்  ஒன்று வந்தது
எங்கள் இல்லத்திற்கு - அந்த
சுந்தரச் செல்லம் தந்தது குளிர்ச்சி எங்கள் உள்ளத்திற்கு
பெண் பிள்ளை வளர்ப்பு கவனத்தின் திறப்பை
செய்திடம் பெற்றவர்க்கு - நம்
பெருமானாரின் வார்த்தையில் அர்த்தமாயிரம்

புதைந்திருக்கு (சொர்க்கத்தில்)

அறியாமை காலம் மடமையின் கோலம் புரியாமல்
பாவத்தை விதைத்தார்கள்
அழகு பதுமையாய் பிறந்த பெண் சிசுவை உயிருடன்
புதைத்தார்கள்
பழிபாவம் பார்க்காமல் தெளிவாக இருந்தார்கள்
பெண்ணாகப் பிறந்தால் உயிர் பலி தான்

பலகால கொடுமையை குழி தோண்டிப் புதைத்தது
நபி நாதரின் வழிதான்
பெண்ணுக்கு பெருமை சேர்ந்தது இஸ்லாம் என்கின்ற
தீன் மார்க்கம் - அது
பேரருளாளரின் அருள் தான் அதுவே நேர்வழி
எல்லோருக்கும்

அல்லது
ஈழத்து கவிஞரின் கவிதை
கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! - நன்றாய்
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்! - உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்?

கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! - என்றும்
காவல் புரிகின்ற சேவகா!
எண்ணில் உன்னைப்போல் இரவுபகலாக


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

ஏவல் புரிபவன் வேறுயார்? - என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?

வட்டமான பெரும் பூசினிக்காய் போல
மஞ்சள் நிற உறுமாலைப்பார்!- தலையில்
மஞ்சள் நிற உறுமாலைப்பார்!
கட்டியிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!-இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!

தொட்டு முறுக்காத மீசையைப்பார்! கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்! - கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்!
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார்! - ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார்!

பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையுங் கண்டதோ ? - உன்றன்
பொல்லாத பார்வையுங் கண்டதோ ?
வாட்ட மில்லாப்பயிர் மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே - வெடி
வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே

கள்ளக் குணமுள்ள காக்கை உன்னைக்கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே - கூடிக்
கத்திக் கத்திக் கரைந்தோடுமே
நள்ளிரவில் வருகள்வனுனைக் கண்டு
நடுநடுங்கி மனம் வாடுமே - ஏங்கி


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

நடுநடுங்கி மனம் வாடுமே

அல்லது
பின்னணி இசை:
அடைக்கலம் தந்த வீடுகளே
போய் வருகின்றோம் நன்றி -நெஞ்சை
அடைக்கும் துயர் சுமந்து செல்கின்றோம் -உங்கள்
அன்புக்கு புலிகளின் நன்றி

நாங்கள் தேடப்படும் காலத்தில் நீங்கள்
கதவு திறந்தீர்களே -எம்மை
தாங்கினால் வரும் ஆபத்தை எண்ணி
பார்க்க மறந்தீர்களே
பார்க்க மறந்தீர்களே...பார்க்க மறந்தீர்களே..

எங்கள் உடல்களில் ஓடும் செங்குருதி
உங்கள் சோறல்லவா உங்கள் சோறல்லவா -நாங்கள்
தங்கியிருந்த நாள் சிலநாள் என்றாலும்
நினைவு நூறல்லவா
நினைவு நூறல்லவா...நினைவு நூறல்லவா...

பெற்றோரை உறவை பிரிந்திருந்தோம் -அந்த
இடைத்தை நிறைத்தீர்களே -மாற்றான்
முற்றுகை நடுவில் மூடியெமையுங்கள்
சிறகால் மறைத்தீர்களே
சிறகால் மறைத்தீர்களே...சிறகால் மறைத்தீர்களே


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

**பிரிவு ஏ : 11-12 அகவை (01/09/2013 – 31/08/2014)**

பாடியவர் : திருஞானசம்பந்தர்
பண் : பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பாடியவர்: மாணிக்கவாசகர் திருவாசகம்
நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே

அருளியவர்: கச்சியப்ப சிவாச்சாரியார்
அருவமும் உருவமும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய!

திருச்சிற்றம்பலம்


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

அல்லது
கிறித்தவப் பாடல்

செந்தமிழில் உந்தன் புகழ் எழுதி
நான் பாடிடுவேன் இறைவா
என் சிந்தனையில் நீ இருந்து
வாழ எழுந்தருள்வாய் தலைவா
என்னில் எழுந்தருள்வாய் தலைவா (செந்தமிழில்)

பாலையில் மன்னா வழங்கி நின்றாய்
பலியினில் உன்னை வழங்குகின்றாய்
காலையில் உணவின்றித் தவிக்கின்றேன்
கனியமுதாய் என்னில் எழுந்தருள்வாய் (செந்தமிழில்)

உன் உடல் உயிர்த்ததுன் வல்லமையால்
உலகினர் உயிர்ப்பதுன் வல்லமையால்
என்னுடல் உயிருடன் வாழ்ந்திடவே
இறைமகனே என்னில் எழுந்தருள்வாய் (செந்தமிழில்)

உன்னுயிர் தியாகம் புரிந்ததனால்
மண்ணுயிர் தினமும் மகிழ்கின்றது
என்னுயிர் மெழுகாய் கரைவதனால்
என்னுயிர் காத்திட எழுந்தருள்வாய் (செந்தமிழில்)

அல்லது

முகமதியார் பாடல்
எழுதியவர் :- நாகூர் ஹனிபா

உங்கள் கொள்கையை..............................இறையோனை கருணை
அல்லாஹ்வின் தூதே அருள் தீபமே
எங்கள் யா நபி எங்கள் யா ஹபீப்
எல்லோரும் போற்றும் இறைத்தூதரே
எங்கள் யா நபி எங்கள் யா ஹபீப்
(அல்லாஹ்வின் தூதே)

அந்நாளிலே மாந்தர் திசை மாறினார்
எந்நாளுமே தீய வழி தன்னிலே
பாவங்களில் மூழ்கி தடுமாறினார்
ஏனென்று கேட்க எவர் நாடினார்
அருளாக வந்தீரே அண்ணல் நபி
கண்கள் தேடுதே எங்கள் யா நபி -2
(அல்லாஹ்வின் தூதே)

தாயிஃப் நகரத்து வீதியிலே
தர்க்கர்கள் உம் மேனியைத் தாக்கினார்
செங்குருதி உங்கள் செம்மேனியில்
வழிந்திட நீர் மயங்கி விழுந்தீர்களே
நினைத்தாலே நெஞ்சம் அழுகின்றதே
எங்கள் யா நபி எங்கள் யா ஹபீப் -2
(அல்லாஹ்வின் தூதே)

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

சுடுபாலை மணல் மீது நான் ஓடவா
சுந்தரப் பூங்காவை நான் தேடவா
புதர் நிறைந்த மலை மீது நான் பார்க்கவா
பாய்கின்ற கண்ணீரை அணை போடவா
நினைத்தாலே நெஞ்சம் அழுகின்றதே
எங்கள் யா நபி எங்கள் யா ஹபீப் -2
(அல்லாஹ்வின் தூதே)

அல்லது

ஈழத்து கவிதை

தைத்திருநாள் இல்லமெல்லாம்
தளிர்த்திடும் தைப்பொங்கல்
இத்தனை நாள் காத்திருந்தோம்
இனிய தமிழ்ப்பொங்கல்

கூவி அழைத்திடும் சேவல்
குதித்தெழுவோம் குளிப்போம்
பூவெடுப்போம் புதிதணிவோம்
பொங்கலன்று நாங்கள்

கோலமிட்டு விளக்கேற்றிக்
கும்பிடுவாள் அம்மா
பாலெடுத்துப் பொங்கலுக்குப்
பானை வைப்பார் அப்பா

விரும்பிய மா வாழை பலா
விதவிதமாய்க் கனிகள்
கரும்பிளனீர் படைத்து மனம்
களித்திடுவோம் நாங்கள்

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

வெண்ணிறப்பால் பொங்கி வர
வெடி சுடுவோம் நாங்கள்
இன்னமுதப் பொங்கலுண்ண
இணைந்து நிற்போம் நாங்கள்

அல்லது

பின்னணி இசை:
என் இனமே... என் சனமே...
என்னை உனக்குத் தெரிகிறதா
எனது குரல் புரிகிறதா
என் இனமே... என் சனமே...

மண்ணை இன்னும் நேசிப்பவன்
அதனால் மரணத்தையே யாசிப்பவன் (என் இனமே)

அன்னை தந்தை எனக்குமுண்டு
அன்பு செய்ய உறவும் உண்டு
என்னை நம்பி உயிர்கள் உண்டு
ஏக்கம் நெஞ்சில் நிறைய உண்டு
மண்ணை இன்னும் நேசிப்பவன்
அதற்காய் மரணத்தையே வாசிப்பவன் (என் இனமே)

பாசறை நான் புகுந்த இடம்
பதுங்கு குழி உறங்குமிடம்
தேசநலன் எனது கடன்
தேன்தமிழே எனது திடல் - அதனால்
மண்ணை இன்னும் நேசிப்பவன்
அதற்காய் மரணத்தையே வாசிப்பவன் (என் இனமே)

என் முடிவில் விடிவிருக்கும்
எதிரிகளின் அழிவிருக்கும்
சந்ததிகள் சிரித்து நிற்க
சரித்திரத்தில் நிறைந்திருப்பேன்
அதனால் மண்ணை இன்னும் நேசிப்பவன்
அதற்காய் மரணத்தையே வாசிப்பவன் (என் இனமே)

**பிரிவு ஐ : 12 - 13 அகவை (01/09/2012 – 31/08/2013)**

பாடியவர் : சுந்தரர்
பண் : நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

பாடியவர்: மாணிக்கவாசகர் திருவாசகம்
அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினிய

அருளியவர்: சேக்கிழார் புராணம்


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

ஞானத்தின் திருவுருவை நான் மறையயின் தனித்துணையை வானத்தின்
மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பை கண்களிப்பக் கண்டார்கள்
திருச்சிற்றம்பலம்

அல்லது

கிறித்தவப் பாடல்:
எனக்காக நீ தந்த

எனக்காக நீ தந்த வாழ்வை ஏந்தி
உனக்காக நான் தந்தேன் இறைவா
இதை ஏற்று உனதாக மாற்றி
அருட்பலியில் எனை நீ இணைப்பாய் இறைவா
அணையாத தீபம் உன் திரு இதயம்
ஏற்றிட வந்தேன் என் சிறு அகலை
உலகின் ஒளியாய் இருப்பவனே
உன்னோடு ஒன்றாக ஏற்றிடுவாய்
ஏற்றிடுவாய் மாற்றிடுவாய்
இறைஞ்சுகின்றேன் இரங்கிடுவாய்

ஏங்கும் விழியில் தேங்கிய நீரும்
அலை ஓயா மனமும் ஏந்தி வந்தேன்
எதையும் தாங்கும் இறையவனே
உன் கோயில் நானாக மாற்றிடுவாய்
ஏற்றிடுவாய் மாற்றிடுவாய்
இறைஞ்சுகின்றேன் இரங்கிடுவாய்

அல்லது


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

முகமதியார் பாடல்
எழுதியவர் :- நாகூர் ஹனிபா

இறைவனிடம் கையேந்துங்கள்
அவன் இல்லையென்று சொல்வதில்லை
பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள் அவன்
பொக்கிஷத்தை மூடுவதில்லை.

இல்லையென்று சொல்லும் மனம் இல்லாதவன்
ஈடு இணையில்லாது கருணை யுள்ளவன்
இன்னல் பட்டு எழும் குரலை கேட்கின்றவன்
எண்ணங்களை இதயங்களை பார்க்கின்றவன்

ஆசையுடன் கேட்பவர்க்கு அள்ளி தருபவன்
அல்லல் துன்பம் துயரங்களை கிள்ளி எறிபவன்
பாசத்தோடு யாவரையும் பார்க்கின்றவன்
பாவ ங்களை பார்வையினால் மாய்க்கின்றவன்

அல்லல் படும் மாந்தர்களே அயராதீர்கள்
அல்லாஹ்வின் பேரருளை நம்பி நில்லுங்கள்
அவனிடத்தில் குறை அனைத்தும் சொல்லி காட்டுங்கள்
அன்பு நோக்க தருகவென்று அழுது கேளுங்கள்

தேடும் நேயர் நெஞ்சங்களில் குடியிருப்பவன்
தேடாத மனிதருக்கும் உணவளிப்பவன்
வாடும் இதயம் மலர்வதற்கு வழி வகுப்பவன்
வாஞ்சையோடு யாவருக்கும் துணை நிற்பவன்

அலை முழங்கும் கடல் படைத்து அழகு பார்ப்பவன்

அலையின் மீதும் கடலின் மீதும் ஆட்சி செய்பவன்
தலைவணங்கி கேட்பவர்க்கு தந்து மகிழ்பவன்
தரணி எங்கும் நிலைத்து நிற்கும் மகா வல்லவன்

அல்லது
ஈழக்கவிஞர் கவிதை:
காசியானந்தன்

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் - என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும் - வாழ்வு
கெட்டு நடுத்தெருவோடு கிடந்து
கீழ் நிலையுற்றாலும் - மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்
துடைக்க மறப்பேனா?

நோயிலிருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும் - ஓலைப்
பாயில் நெளிந்து மரணம் அடைந்து
பாடையில் ஊர்ந்தாலும் - காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும் - என்றன்
தாயில் இனிய தமிழ் மொழியின் துயர்
தாங்க மறப்பேனா?

பட்ட மளித்து பதவி கொடுத்தொரு
பக்கம் இழுத்தாலும் - ஆள்வார்
கட்டி அணைத்தொரு முத்த மளித்துக்

கால்கை பிடித்தாலும் - என்னைத்
தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்
தோழமை கொண்டாலும் - அந்த
வெட்டி மனிதர் உடல்களை மண்மிசை
வீழ்த்த மறப்பேனா?

பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டி வதைத்தாலும் - என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் - உயிர்
தொங்கிய அசைந்து மடிந்து தசையுடல்
தூள் பட நேர்ந்தாலும் - ஒரு
செங்கலம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனா?

அல்லது
பின்னணி இசை
தென்னம் கீற்றில் தென்றல் வந்து மோதும்
என் தேசம் எங்கும் குண்டு வந்து வீழும்
கன்னி மனம் மெல்ல மெல்ல மாறும் அவள்
கையில் கூட ஆயுதங்கள் ஏறும்
தென்னம் கீற்றில் தென்றல் வந்து மோதும்
என் தேசம் எங்கும் குண்டு வந்து வீழும்
நிலவு வந்து பொழியும் நேரம் நீ வரவில்லை
நான் நீண்டநேரம் காத்திருந்தேன் பதில் தரவில்லை

ஊர் முழுதும் ஓலம் நான் உறங்கி வெகு காலம்
உறங்கி வெகு காலம் நீ ஓடி வந்தால் போதும்

தென்னம் கீற்றில் தென்றல் வந்து மோதும்
என் தேசம் எங்கும் குண்டு வந்து வீழும்
காவலுக்கு வந்த பேய்கள் கடிக்கும் நாளையில் ..
ஒரு காதல் என்ன மாலை என்ன இந்த வேளையில்
எங்கள் புலி வீரர் அவர் இருக்கும் இடம் போறேன்
இருக்கும் இடம் போறேன் தமிழீழம் வந்தால் வாறேன்
தென்னம் கீற்றில் தென்றல் வந்து மோதும்
என் தேசம் எங்கும் குண்டு வந்து வீழும்

தென்றல் வந்து தொட்டுஎன்னைகேலி செய்த்து
நீ செனற இடம் சொன்ன பின்பு வேலி போட்டது
காலம் வந்து சேரும் புலி களத்தில் வாகை சூடும்
களத்தில் வாகை சூடும் என் கழுத்தில் மாலை ஆடும்
தென்னம் கீற்றில் தென்றல் வந்து மோதும்
என் தேசம் எங்கும் குண்டு வந்து வீழும்

தங்க மேனி நொந்து ஈழத்தாய் அழுகின்றாள்
என்தலைவன் இந்த நிலையை பார்த்துத்தான் உருகின்றான்.
எங்கள் மேனி சாகும் இல்லை எதிரி ஆவி போகும்
எதிரி ஆவி போகும் தமிழ் ஈழம் வந்து சேரும்
தென்னங்கீற்றில் தென்றல் வந்து மோதும்
என் தேசம் எங்கும் குண்டு வந்து வீழும்

உன்னை நெஞ்சில் தூங்க வைத்துப்பாட்டு பாடுவேன் எம் உரிமைக்காக
நானும் வந்து படையில் சேருவேன்
வேங்கை தோற்பதில்லை நம்வீரர் சாவதில்லை
வீரர் சாவதில்லை எம் விடிவு தூரம் இல்லை
தென்னங்கீற்றில் தென்றல் வந்து மோதும்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

என் தேசம் எங்கும் குண்டு வந்து வீழும்

**பிரிவு ஒ : 13 -14 அகவை (01/09/2011 – 31/08/2012)**
பாடியவர் : தி திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும்,
இனித்தம்உடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே

பாடியவர்: மாணிக்கவாசகர்

பால் நினைந்து ஊட்டும் தாயினும்
சாலப் பரிந்து, நீ, பாவியேனுடைய
ஊனினை உருக்கி, உள் ஒளி பெருக்கி,
உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து, புறம் புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யான் உனைத் தொடர்ந்து, சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே

அருளியவர்: சேக்கிழார்
ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி
திருச்சிற்றம்பலம்.


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

அல்லது

கிறித்தவப் பாடல்:
அர்ச்சனை மலராக

அர்ச்சனை மலராக ஆலயத்தில் வருகின்றோம் ஆனந்தமாய் புகழ் கீதம் என்றும் பாடுவோம். அர்ப்பணித்து வாழ்ந்திட
அன்பர் உம்மில் வளர்ந்திட
ஆசையோடு அருள் வேண்டிப் பணிகின்றோம்

தாயின் கருவிலே உருவாகும் முன்னரே
அறிந்து எங்களைத் தேர்ந்த தெய்வமே பாவியாயினும் பச்சைப் பிள்ளையாயினும் அர்ச்சித்திருக்கின்றீர் கற்பித்திருக்கின்றீர் மனிதராகப் புனிதராக வாழப் பணிக்கின்றீர்
பிறரும் வாழ எங்கள் வாழ்வைக்
கொடுக்க அழைக்கின்றீர்
அஞ்சாதே என்று எம்மைக் காத்து வருகின்றீர்

அல்லது
முகமதியார் பாடல் :
எழுதியவர் :- நாகூர் ஹனிபா

லா இலாஹா இல்லல்லாஹுவில்
இன்பம் கொள் நெஞ்சமே
தூய கலிமா அதனை
தினமும் ஓதுவாய் நெஞ்சமே
லா இலாஹா இல்லல்லாஹுவில்
இன்பம் கொள் நெஞ்சமே
லா இலாஹா இல்லல்லாஹு...


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

பாசமாக வணங்குதற்கே
பண்புள்ளோன் யாரும் இல்லை
மாசில்லாத இறைவனன்றி
மாண்புள்ளோன் யாரும் இல்லை
நேசமாய் இதை உணர்ந்து
நேசமாய் இதை உணர்ந்து
நிதமும் ஓதுவாய் நெஞ்சமே
லா இலாஹா இல்லல்லாஹு...

தூது வந்த வேத நபிமார்
தொடர்ந்தே ஓதினரே
மேதையான மேன்மை வலிமார்
மகிழ்ந்தே ஓதினரே
சாதகம் தரும் கலிமா
சாதகம் தரும் கலிமா
சார்ந்து ஓதுவாய் நெஞ்சமே
லா இலாஹா இல்லல்லாஹு...

ஆதி நாதன் தூய நாமம்
அறமாய் நினைத்திடுவாய்
வேத போதம் மீறிடாமல்
உண்மையாய் மதித்திடுவாய்
ஜோதி ரஹ்மான் அருளை
ஜோதி ரஹ்மான் அருளை
சூழ்ந்து ஓதுவாய் நெஞ்சமே
லா இலாஹா இல்லல்லாஹு...

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

துன்பம் யாவும் மாறிப் போகும்
இன்பம் தான் நிலைத்திடுமே
அன்பு மேவும் ஆற்றல் கூடும்
அமைதி தழைத்திடுமே
நன்மையாய் நெறி அறிந்து
நன்மையாய் நெறி அறிந்து
நாளும் ஓதுவாய் நெஞ்சமே
லா இலாஹா இல்லல்லாஹுவில்
இன்பம் கொள் நெஞ்சமே
தூய கலிமா அதனை
தினமும் ஓதுவாய் நெஞ்சமே
லா இலாஹா இல்லல்லாஹு
இலாஹா இல்லல்லாஹு
இலாஹா இல்லல்லாஹு...

அல்லது
ஈழத்து கவிஞரின் கவிவரிகள்:
கவிவரிகள்: சோமசுந்தரப்புலவர்
பவளக்கொடி

பருத்தித்துறை யூராம்
பவளக்கொடி பேராம்
பாவைதனை யொப்பாள்
பாலெடுத்து விற்பாள்
அங்கவட்கோர் நாளில்
அடுத்ததுயர் கேளிர்!


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

பாற்குடஞ் சுமந்து பையப்பைய நடந்து சந்தைக்குப்
போம்போது தான்நினைந்தாள் மாது: "பாலையின்று
விற்பேன் காசைப்பையில் வைப்பேன்" முருகரப்பா
வீட்டில் முட்டைவிற்பாள் பாட்டி கோழிமுட்டை வாங்கிக் குஞ்சுக்குவைப்
பேனே

புள்ளிக்கோழிக் குஞ்சு
பொரிக்குமிரண் டைஞ்சு
குஞ்சுகள் வளர்ந்து
கோழியாகும் விரைந்து
விரைந்துவளர்ந் திடுமே
வெள்ளைமுட்டை யிடுமே

முட்டைவிற்ற காசை முழுதுமெடுத் தாசை வண்ணச்சேலை
சட்டை மாதுளம்பூத் தொப்பி வாசனை செருப்பு வாங்குவேன்
விருப்பு வெள்ளைப்பட் டுடுத்து மினுங்குதொப்பி தொடுத்துக் கையிரண்டும்
வீசிக் கதைகள்பல பேசிச் சுந்தரிபோல் நானே கடைக்குப்போ வேனே

அரியமலர் பார்ப்பாள்
அம்புசமும் பார்ப்பாள்
பூமணியும் பார்ப்பாள்
பொற்கொடியும் பார்ப்பாள்

சரிகைச்சேலை பாரீர்
தாவணியைப் பாரீர்
வண்ணச்சட்டை பாரீர்
வடிவழகு பாரீர்
என்றுயாரும் புகழ்வர்
என்னையாரோ இகழ்வர்?

'பாரும்பாரும்' என்று
பவளக்கொடி நின்று
சற்றுத்தலை நமிர்ந்தாள்
தையலென்ன செய்வாள்?

பாலுமெல்லாம் போச்சு
பாற்குடமும் போச்சு

மிக்கதுய ரோடு
வீடுசென்றாள் மாது
கைக்குவரு முன்னே
நெய்க்குவிலை பேசேல்.

அல்லது
பின்னணி இசை:
ஓ மரணித்த வீரனே
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதணிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

ஓ மரணித்த வீரனே!
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதணிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

உன் இறுதிப்பார்வையை பகையைவெல்லும் உன் துணிவை
எவருமே காணாத உன்னிரு துளி கண்ணீரை
உன் இறுதிப்பார்வையை பகையைவெல்லும் உன் துணிவை

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

எவருமே காணாத உன்னிரு துளி கண்ணீரை
தப்பியோடும் உன்விருப்பை தனித்து நிற்கும் தீர்மானத்தை
உன்தோழன் இருகூறாய் துண்டாடப்பட்டதனால்
தப்பியோடும் உன்விருப்பை தனித்து நிற்கும் தீர்மானத்தை
உன்தோழன் இருகூறாய் துண்டாடப்பட்டதனால்
உன் துன்பம் என்னவென்று நான் அறிந்து கொள்வதற்கு...

ஓ மரணித்த வீரனே!
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதணிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

உன் வீட்டு முகவரியை இறுதி மூச்சில் எனக்குத் தா
எஞ்சிய வீடுகளில் பிழைத்தவர்கள் மத்தியிலே
உன் வீட்டு முகவரியை இறுதி மூச்சில் எனக்குத் தா
எஞ்சிய வீடுகளில் பிழைத்தவர்கள் மத்தியிலே
உற்றாரைக் கண்டுபிடித்து உன்னைப் பற்றிச் சொல்வதற்கு
இன்னுயிரை உவந்தளித்த உன் துணிவைப் போற்றுதற்கு
உற்றாரைக் கண்டுபிடித்து உன்னைப் பற்றிச் சொல்வதற்கு
இன்னுயிரை உவந்தளித்த உன் துணிவைப் போற்றுதற்கு
வார்த்தைகள் போதவில்லை வரலாறு பாடுமுன்னே.

ஓ மரணித்த வீரனே!
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதணிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

ஓ மரணித்த வீரனே!
உன் சீருடைகளை எனக்குத்தா

உன் பாதணிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா

**பிரிவு ஓ : 14- 15அகவை (01/09/2010 – 31/08/2011)**

பாடியவர் : திருஞானசம்பந்தர்
பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே

பாடியவர்: மாணிக்கவாசகர்
பூசுவது வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ!
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசன்அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

அருளியவர்: கச்சியப்பர்

மூவிரு முகங்கள் போற்றி!
முகம் பொழி கருணை போற்றி!
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி! காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலர்அடி போற்றி! அன்னான்
சேவலும் மயிலும் போற்றி!

திருக்கைவேல் போற்றி! போற்றி!

திருச்சிற்றம்பலம்

அல்லது

கிறித்தவப் பாடல்:

எந்தன் மனம்

எந்தன் மனம் ஏந்தி வந்தேன்
உந்தன் பதம் வாழ்வைத் தந்தேன்
ஏற்பாய் இறைவா பரம்பொருளே
தந்திடு உன் தரிசனம் கண்டிடவே வந்தேன்
தவித்திடும் மனதையே உன்னிடம் தரவந்தேன்

உறவின் நிறைவே உண்மையின் திருவே
உம் கையில் எனைச் சேர்க்க
இதயம் தருகின்றேன்.
நல்லுறவைத் தேடித் தேடி
உலகெங்கும் நான் திரிந்தேன்
உள்ளிருக்கும் உனையுணர
நானும் மறந்திட்டேன்
எதை நான் தருவேன் என் அன்பு தெய்வமே
இருப்பதைப் பகிர வந்தேன் அன்பு தெய்வமே
உன்னில் நானும் என்னில் நீயும்
இணைந்திடவே வந்தேன்

அல்லது

முகமதியார் பாடல் :

எழுதியவர் :- நாகூர் ஹனிபா

எங்கும் நிறைந்தோனே
இருகரம் ஏந்துகிறேன் அல்லாஹ்,
எங்கும் நிறைந்தோனே
இருகரம் ஏந்துகிறேன் அல்லாஹ்,
சங்கை மிகுந்தோனே
சஞ்சலம் தீர்த்திடு யா அல்லாஹ்,

உன்னை அன்றி யார்தான் எனக்கு
உதவிடுவார் அல்லாஹ்,
உன்னை அன்றி யார்தான் எனக்கு
உதவிடுவார் அல்லாஹ்,
அன்பும் பண்பும் ஆற்றல் நிறைந்தோனே
அருள்வாய் யா அல்லாஹ், (எங்கும் நிறைந்தோனே)

வானில் மிளிரும் அருஷினிலே
என்றும் வாகாய் வாழும் நல்லவனே,
வானில் மிளிரும் அருஷினிலே
என்றும் வாகாய் வாழும் நல்லவனே,
தேனுலகம் உயர் சொர்க்கத்தையும்
தீய நரகத்தையும் படைத்த வல்லவனே,
என் மேல் கோபமா,
என் மேல் கோபமா எந்தன் இதயம் தாங்குமா,
இனிதாய் நலமாய் வளமாய் வாழ
அருள்வாய் யா அல்லாஹ்,

என்றும் அருள்வாய் யா அல்லாஹ், (எங்கும் நிறைந்தோனே)

இரவை பகலில் புகுத்துகிறாய்
நல்ல பகலை இரவில் புகுத்துகிறாய்,
இரவை பகலில் புகுத்துகிறாய்
நல்ல பகலை இரவில் புகுத்துகிறாய்,
உருவாய் யாவும் அறிகின்றாய்
மிக உன்னத ஆட்சி புரிகின்றாய்,
என் மேல் கோபமா
என் மேல் கோபமா எந்தன் இதயம் தாங்குமா,
இனிதாய் நலமாய் வளமாய் வாழ
அருள்வாய் யா அல்லாஹ்,
என்றும் அருள்வாய் யா அல்லாஹ், (எங்கும் நிறைந்தோனே)

பரிவுடன் என்றும் பார்ப்பவனே
நிதம் பாங்காய் உதவி செய்பவனே,
பரிவுடன் என்றும் பார்ப்பவனே
நிதம் பாங்காய் உதவி செய்பவனே,
கருணை மழையை பொழிபவனே
மகா கண்ணியம் வாய்ந்த தூயவனே,
என் மேல் கோபமா
என் மேல் கோபமா எந்தன் இதயம் தாங்குமா,
இனிதாய் நலமாய் வளமாய் வாழ
அருள்வாய் யா அல்லாஹ்,
என்றும் அருள்வாய் யா அல்லாஹ், (எங்கும் நிறைந்தோனே)
அழைப்போர் குரலை கேட்பவனே
மிக அழகாய் செல்வம் கொடுப்பவனே,
அழைப்போர் குரலை கேட்பவனே

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

மிக அழகாய் செல்வம் கொடுப்பவனே,
எழிலாய் நாட்டம் ஏற்பவனே
என்றும் நிலையாய் நிலத்து இருப்பவனே,
என் மேல் கோபமா,
என் மேல் கோபமா எந்தன் இதயம் தாங்குமா,
இனிதாய் நலமாய் வளமாய் வாழ
அருள்வாய் யா அல்லாஹ்,
என்றும் அருள்வாய் யா அல்லாஹ், (எங்கும் நிறைந்தோனே)

அல்லது
ஈழத்து கவிஞரின் கவிதை :
கவிவரிகள்: மஹாகவி து.உருத்திரமூர்த்தி
மீண்டும் தொடங்கும் மிடுக்கு

மப்பன்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது
ஏர் ஏறாது காளை இழுக்காது எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன்விளைவிப்பான் என்னூரான்
ஆழத்து நீருக்ககழ்வான் அவன் நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான் ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்தது பார் நன்னெல்லு

தங்கநகைகள் தலைக்கணிந்த பெண்களே
கூடிக் குனிந்து கும்மி கொட்டுவதும் காதினிக்கப்
பாடிக் கவலை பறக்கச் செய்கின்றதும் போல்
முற்றி, மனிதன் முயற்சிக்கு இறை கொடுக்கும்
பொற்காசாம் நெல்லுப் பொதி சுமந்து கூத்தாடும்
அந்தப் பயிரின் அழகை அளந்தெழுத


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

எந்தச் சொல்லுண்டாம் எமக்கு? அவ்வுழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான் ஒரு கதிரைக் கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான் கிறுகிறுத்துப் போகின்றான்.

வாடும் வயலுக்கு வார்க்கா முகில்க்; கதிர்கள்
சூடும் சிறுபயிர்மேல் 'சோ' வென்று நள்ளிரவிற்
கொட்டும் உடன் கூடும் கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத் திசையும் நடுங்கி முழங்கி எழும்

ஆட்டத்து மங்கையர்போல் அங்கு மொய்த்து நின்ற பயிர்
பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய்விடவே
கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று........பின்னர் அது
வற்றியதும் ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி
பற்றி, அதோ பார் பழையபடி கிண்டுகிறான்

சேர்த்தவற்றை முற்றும் சிதறவைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்
ஈண்டு முதலில் இருந்து முன்னேறுதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு.

அல்லது

பின்னணி இசை:

வீசும் காற்றே தூது செல்லு......................!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு.......................!!
வீசும் காற்றே தூது செல்லு......................!!!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு.......................!!!!

ஈழத்தில் நாம்படும் வேதனைகள்............................!
ஈழத்தில் நாம்படும் வேதனைகள்...............................!!

இதை எங்களின் சோதரர் காதில் சொல்லு...........................!!!

வீசும் காற்றே தூது செல்லு.......................................!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு......................!!

எங்கு முகிலினம் பாட மறந்தது.........................!
எங்கள் புல்வெளி ஆடை இழந்தது.........................!!
எங்கு முகிலினம் பாட மறந்தது.........................!
எங்கள் புல்வெளி ஆடை இழந்தது.........................!!

தங்கைகளின் பெரும் மங்களம் போனது!.........................!
சாவு எமக்கொரு வாழ்வென ஆனது.............!!

வீசும் காற்றே தூது செல்லு!,.......................!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு!!.......................!!
வீசும் காற்றே தூது செல்லு!,.......................!!!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு!!.......................!!!!

உங்கள் கொடிமலர் இங்கு மடியுது ................!

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

ஊர்மனையாவிலும் சாகுரல் கேட்குது.....................!!
உங்கள் கொடிமலர் இங்கு மடியுது ................!
ஊர்மனையாவிலும் சாகுரல் கேட்குது.....................!!

இங்குள பேய்களும் செய்ய மறந்ததை.....................!!!
இங்குள பேய்களும் செய்ய மறந்ததை.....................!!!
உங்களின் இராணுவம் செய்து முடிக்குது..............!!!!

வீசும் காற்றே தூது செல்லு!,......................!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு!!........................!!
வீசும் காற்றே தூது செல்லு!,......................!!!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு!!........................!!!!

கத்திட கேட்டிடும் தூரமல்லோ....................!
கடல் கைவந்து தாங்கிடும் நீளமல்லோ...........!!
கத்திட கேட்டிடும் தூரமல்லோ....................!
கடல் கைவந்து தாங்கிடும் நீளமல்லோ...........!!

எத்தனை எத்தனை இங்கு நடந்திட................!!!
எத்தனை எத்தனை இங்கு நடந்திட................!!!
எங்களின் சோதரர் தூக்கல்லோ?.........................!!!!

வீசும் காற்றே தூது செல்லு!,......................!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு!!........................!!
வீசும் காற்றே தூது செல்லு!,......................!!!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு!!........................!!!!

வேங்கையை வேட்டைகள் ஆடுகிறார்................!
புலி வீரரை காட்டினில் தேடுகிறார்........................

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

வேங்கையை வேட்டைகள் ஆடுகிறார்.................
புலி வீரரை காட்டினில் தேடுகிறார்.........................

தாங்க முடியலை வேதனைகள் .......ள்ள்ள்.........................!
தாங்க முடியலை வேதனைகள் ..........................................!
இதை தாயக பூமியில் காதில் சொல்லு...................!!

வீசும் காற்றே தூது செல்லு!,.......................!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு!!.........................!!
வீசும் காற்றே தூது செல்லு!,.......................!!!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு!!.........................!!!!

ஈழத்தில் நாம்படும் வேதனைகள்!
ஈழத்தில் நாம்படும் வேதனைகள்!!

இதை எங்களின் சோதரர் காதில் சொல்லு!!
வீசும் காற்றே தூது செல்லு!,.......................!
தமிழ் நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு!!.........................!!



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

**பிரிவு ஔ : 15 - 16அகவை (01/09/2009 – 31/08/2010)**

பாடியவர் : திருஞானசம்பந்தர்
பண்: புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே

பாடியவர்: மாணிக்கவாசகர்
யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய்;
ஆனால், வினையேன் அழுதால், உன்னைப் பெறலாமே?
தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, தித்திக்கும்
மானே, அருளாய் அடியேன் உனை வந்து உறுமாறே.

அருளியவர்: சேக்கிழார்
தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்க டொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்.

திருச்சிற்றம்பலம்

அல்லது

கிறித்தவப் பாடல்:
எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

ஆதியும் நீரே - அந்தமும் நீரே
ஜோதியும் நீரே - என் சொந்தமும் நீரே

தாய்தந்தை நீரே - தாதியும் நீரே
தாபரம் நீரே - என் தாரகம் நீரே

வாழ்விலும் நீரே - தாழ்விலும் நீரே
வாதையில் நீரே - என் பாதையில் நீரே

துன்பநேரத்தில் - இன்பமும் நீரே
இன்னல் வேளையில் - என் மாறிடா நேசர்

அல்லது
முகமதியார் பாடல் :
எழுதியவர் :- நாகூர் ஹனிபா

உலகம் இறைவனின் சந்தை மடம்
இது வருவோரும் போவோரும் தங்கும் இடம்
உலகம் இறைவனின் சந்தை மடம்
இது வருவோரும் போவோரும் தங்கும் இடம்
இதுவல்ல நமக்கு சொந்த இடம்
இதுவல்ல நமக்கு சொந்த இடம்


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

அங்கே இருக்குது வேறு உரிய இடம்
உரிய இடம்…
கருவூரில் இருந்து புறப்படுவான் கொஞ்சம்
களைப்பாற இங்கே தங்கிடுவான்
உறவோடு உரிமையும் கொண்டாடுவான் அவன்
ஒருவருக்கும் சொல்லாமல் ஓடிடுவான்
இருப்பவன் இங்கேயே நிலைப்பதில்லை யாரும்
இதை விட்டுப் போனவன் திரும்பவில்லை
மறுப்பவன் இதனை யாரும் இல்லை
மனதில் ஆசைகள் மட்டும் குறையவில்லை
பிறந்ததும் பாங்குண்டு தொழுகை இல்லை அவன்
இறந்ததும் தொழுகைக்கு பாங்கு இல்லை
புரிந்தவன் ஆணவம் கொள்வதில்லை இதை
புரியாதவன் அறிவு தெளிவதில்லை
தொடரும் கதை ஒரு நாள் முடிந்து விடும் அந்த
தூயோனின் தீர்ப்பு அதைக் காட்டி விடும்
நடை போட்ட முன்னோர்கள் சென்ற இடம் நீ
நினைத்தாலே சிந்தனைகள் மாறி விடும்
உலகம் இறைவனின் சந்தை மடம்
இது வருவோரும் போவோரும் தங்கும் இடம்
உலகம் இறைவனின் சந்தை மடம்
அல்லது

ஈழத்து கவிஞரின் கவிதை :
பாடியவர் : சோமசுந்தரப்புலவர்
நூல் : சிறுவர் செந்தமிழ்
செந்தமிழ்த் தாய்

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்
தெய்வத் தமிழ்மொழிச் சீரினைத் தேரீர்
அந்தமி லெம்மொழி மாதா - படும்
அல்லலைத் தீர்க்க அறிவுவ ராதா ( செந்தமிழ்)

முச்சங்கத் தரியணை யேறி - மன்னர்
முடிதொட்ட மூவரும் அடிதொட்டுப் போற்ற
விச்சையா லரசாண்ட மாதா - அவள்
வேதனை தீர்க்க விரக்கம்வ ராதா ( செந்தமிழ்)

இன்னமு தோதெளி தேனே - என
எஞ்செவிக் கினிக்கின்ற மொழியெது தானோ
அன்னை மொழிதனை நாமோ - வெறுத்
தருவருத் தவமதித் திடலழ காமோ ( செந்தமிழ்)

சிந்தையிற் றேனமு தூறி - நாவில்
தித்தித்துத் தித்தித்துச் செவிவழி யேறி
வந்து கனிந்திருள் கீறி - எம்மை
வாழ்விக்கும் மொழியினை மறப்போமோ மீறி ( செந்தமிழ்)

வேற்று மொழிகளைக் கற்றோம் - எங்கள்
மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றோம்
ஆற்றிலே புளிகரைத் திட்டோம் - ஐயோ
அருமந்த தமிழினை யறியாது கெட்டோம் (செந்தமிழ்)


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

அல்லது

பின்னணி இசை:
கார்த்திகை மாதம் பூத்திடும் போதில்
கார்த்திகை பூக்களும் பூத்திடும்.
கண்ணில் நீர்த்துளி கோர்க்கும் நிலமது
வேர்க்கும் நெஞ்சில்
நெருப்பினை மூட்டிடும்.

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும்
வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர்
கனவினை எண்ணத்திலே வளர்த்தோம்
கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும்
வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர்
கனவினை எண்ணத்திலே வளர்த்தோம்

கல்லறை வாழ்ந்திடும் வல்லவரே - உம்மை
கைதொழ வந்துள்ளோம் கண் திறப்பீர்
மெல்லிய புன்னகை மேகங்களே - உங்கள்
சொந்தங்கள் வந்துள்ளோம் வாய் திறப்பீர்

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும்
வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர்
கனவினை எண்ணத்திலே வளர்த்தோம்

ஆயிரம் ஆயிரம் பேர்களை விதைத்தோம்
கல்லறை வரிசைகள் நீள்கிறதே - அந்த

வரிசையில் சுடர்கள் ஏத்திடும் பொழுதில்
நெஞ்சினில் நெருப்பது மூழ்கிறதே.
வானத்தின் திருநாள் கார்த்திகையில்
மாவீரத்தின் பெருநாள் கார்த்திகையில்
மானத்தின் திருநாள் கார்த்திகையில்
எங்கள் மாதவ நாளதும் கார்த்திகையில்
கார்த்திகை மாதம் கருப்பு இந்த
கார்த்திகை மாதம் நெருப்பு
கார்த்திகை மாதம் கருப்பு இந்த
கார்த்திகை மாதம் நெருப்பு

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும்
வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர்
கனவினை எண்ணத்திலே வளர்த்தோம்
கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும்
வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர்
கனவினை எண்ணத்திலே வளர்த்தோம்.

வீசிடும் காற்றதும் சூரிய தீயதும்
உங்களின் கல்லறையை பணிகிறதே -எங்கள்
தாயகம் முழுவதும் தாங்கிய
தோள்களை பாத்திட விழிகளும் ஏங்கிறதே
விதைப்பதும் முளைப்பதும் கார்த்திகையில்
உங்கள் விழிகளும்
மலர்வதும் கார்த்திகையில்
நெருப்புகள் எரிப்பதும்

கார்த்திகையில் எங்கள் நெஞ்சுகள்
ஜெய்ப்பதும் கார்த்திகையில்

கார்த்திகை மாதம் கருப்பு இந்த
கார்த்திகை மாதம் நெருப்பு
கார்த்திகை மாதம் கருப்பு இந்த
கார்த்திகை மாதம் நெருப்பு

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும்
வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர்
கனவினை எண்ணத்திலே வளர்த்தோம்

கல்லறை வாழ்ந்திடும் வல்லவரே - உம்மை
கைதொழ வந்துள்ளோம் கண் திறப்பீர்.
மெல்லிய புன்னகை மேகங்களே - உங்கள்
சொந்தங்கள் வந்துள்ளோம் வாய் திறப்பீர்.

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும்
வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர்
கனவினை எண்ணத்திலே வளர்த்தோம்
கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும்
வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர்
கனவினை எண்ணத்திலே வளர்த்தோம்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

**பிரிவு ஃ : 16 - 17அகவை (01/09/2008 – 31/08/2009)**
பாடியவர் : சுந்தரர்
பண்: பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

திருவாசகம்
வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே

அருளியவர்: சேக்கிழார்
இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்
திருச்சிற்றம்பலம்


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

அல்லது

கிறித்தவப் பாடல்
சுகராகம் நீயே இயேசுவே உன் நாமம் போற்றுவேன்
தெவிட்டாத நீர்ச்சுனையாகவே கவி நூறு பாடுவேன்
மேகமாய் பொழியும் அருளும் நீ
நேசமாய் தாங்கும் தாய்மடி நீ
தினம் தோறும் வாழ்த்துவேன்

உந்தன் தோளில் சாயும் நேரம் என்னை மறக்கிறேன்
உந்தன் மூச்சில் இணையும் போது என்னை துறக்குறேன்
அன்பின் சிறகில் நாளும் நானும் விடியல் காணுவேன்
அழகின் இமையில் இனிதாய் எதிலும் புதிதாய் தோன்றுவேன்
நீயே எந்தன் ஜீவன் நீயே எந்தன் ஆற்றல்
நீயே இல்லை என்றால் எனது உலகம் இல்லை

கருணை நிறைந்த பார்வை போதும் அகந்தை அழிக்கிறேன்
அருகில் அமரும் இதயம் தந்தால் சுயத்தை இழக்கிறேன்
உதயம் தேடும் மலராய் இறை உன் நினைவில் வாழுவேன்
புவியில் விழுந்த விதையாய் உலகில் விருச்சம் தேடுவேன்
நீயே எனக்கு சொந்தம் நீயே வாழ்வின் தஞ்சம்
உயிரே நீயும் இல்லை என்றால் நானும் இல்லையே

அல்லது

முகமதியார் பாடல் :

எழுதியவர் :- நாகூர் ஹனிபா

கன்னியரே அன்னையரே
கொஞ்சம் நில்லுங்கள்
நம் கண்மணியாம் பாத்திமாவின்
சரிதம் கேளுங்கள் (கன்னியரே அன்னையரே)

மாதவத் தூதர் முஹம்மது நபியின்
மகளாய் வந்து பிறந்தார்
போதில்லாத முழுமதி எனவே
குலக்கொடியாக வளர்ந்தார்
தந்தையின் சொல்லை சிந்தையுள் ஏந்தி
சங்கை வளர் மங்கை ஆனாரே (கன்னியரே அன்னையரே)

அன்னை ஹதீஜா நன்னய பண்பை
அகம் அதில் தாங்கி சிறந்தார்
கண்ணில் கருணை கையில் தானம்
கல்பில் இறைவேதம் சுமந்தார்
செல்வத்தை மறுத்து வறுமையை ஏற்று
சீமாட்டியாகவே வாழ்ந்தாரே (கன்னியரே அன்னையரே)

வானவர் வாழ்த்த யாவரும் போற்ற
வீரர் அலியை மணந்தார்
தீன் குலப்பெண்கள் புறவை ஒழிக்க
சிறப்புடன் இல்லறம் புகுந்தார்
கணவர் அலியை கண்ணுக்குள் வைத்தே
கனிவாய் பணிவிடை செய்தாரே (கன்னியரே அன்னையரே)

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

சொர்கத்தின் நிழலாய் கணவரை மதித்து
சோபன வாழ்வில் மிதந்தார்
அருமை மைந்தர்கள் ஹசன் ஹுஸைனின்
அன்புத் தாயாகி மகிழ்ந்தார்
புவனத்தூதர் தந்தை முஹம்மதை
பொக்கிஷமாகவே மதித்தாரே (கன்னியரே அன்னையரே)

அரஃபாத் வெளியில் இறைவன் தூதை
அண்ணல் நபிமுடித்தார்கள்
இறைவன் அழைப்பை ஏற்றே நபிகள்
இம்மை வாழ்வை விடுத்தார்கள்
தந்தையை இழந்த செல்வி பாத்திமா
தனலில் புழுவாய் துடித்தாரே (கன்னியரே அன்னையரே)

எம் பெருமானார் இதயமாகவே
இலங்கிய மாதர்த் திலகம்
தம் உடல் மெலிந்து கண்ணொளி மங்கி
சருகென மாறிப்போனார்
விந்தைகள் சூடும் இப்புவிமீதில்
விரைந்தே கழிந்தன மாதங்கள் (கன்னியரே அன்னையரே)

இம்மையின் வாழ்வு முடிவதை அன்று
இதயத்தினாலே உணர்ந்தார்
தம்முடல் குளித்து கஃப்பன் உடை தரித்து
கணவர் மார்பில் சரிந்தார்
கண்ணீர் முத்துக்கள் கன்னத்தில் உருள
கணவரை கனிவுடன் பார்த்தாரே (கன்னியரே அன்னையரே)


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

வல்லோன் நல்கிய அர்ஷின்குலியே
விடைகொடுத்தனுப்புங்கள் என்றார்
பிள்ளைச் செல்வங்கள் ஹசன் ஹுசைனை
பிடித்தவர் கையில் கொடுத்தார்
அல்ஹம்துலில்லா என்றே கூறி
அகிலத்தின் வாழ்வை முடித்தாரே
அகிலத்தின் வாழ்வை முடித்தாரே
இன்னாலில்லாஹி வ இன்ன இலைஹி ராஜிவூன்
இன்னாலில்லாஹி வ இன்ன இலைஹி ராஜிவூன்
இன்னாலில்லாஹி வ இன்ன இலைஹி ராஜிவூன்....

அல்லது

ஈழத்து கவிதை
பாடியவர் : க. வேந்தனார்

இளமைப் பருவம் இனிய பருவம்
எழுச்சி நல்கும் பருவம்
விளையும் அன்பும் தொண்டும் வாழ்வில்
விருந்து செய்யும் பருவம்

மலையைத் தூக்கித் தலையில் வைக்க
மார்பு தட்டும் பருவம்
கலைகள் கற்று புலமையாலே
கருத்து மலரும் பருவம்

நாட்டை மொழியை அடிமையாக்க
நாங்கள் இங்கு வாழோம்
ஈட்டி முனையில் உயிரைக் கொடுப்போம்
என்றெழும்பும் பருவம்

இன்னல் கோடி வாழ்வில் வந்து
எதிர்த்து நின்ற போதும்
தன்னலத்தை பேணிடாத
சால்பு கொண்ட பருவம்

சென்ற கால நிகழுங் காலச்
செயல்கள் யாவும் தேர்ந்தே
என்றும் வாழும் எதிர்காலத்தை
இயற்றும் நிலைமை பருவம்

அல்லது
பின்னணி இசை:
மாங்கிளியும் மரங்கொத்தியும்
கூடு திரும்பத் தடையில்லை
நாங்கள் மட்டும் உலகத்திலே
நாடு திரும்ப முடியவில்லை
நாடு திரும்ப முடியவில்லை

சிங்களவன் படைவானில்
நெருப்பை அள்ளிச் சொரிகிறது
எங்கள் உயிர்த் தமிழீழம்
சுடுகாடாய் எரிகிறது

தாயகத்துப் பிள்ளைகளின்
நெஞ்சுகளைக் கிழிக்கிறான்
காயாகும் முன்னே இளம்
பிஞ்சுகளை அழிக்கின்றான்


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

பெற்றவங்க ஊரிலே
ஏங்குறாங்க பாசத்திலே
எத்தனை நாள் காத்திருப்போம்
அடுத்தவன் தேசத்திலே

உண்ணவும் முடியவில்லை
உறங்கவும் முடியவில்லை
எண்ணவும் முடியுதில்லை
இன்னும்தான் விடியுதில்லை

கிட்டிப்புள்ளு அடித்து நாங்கள்
விளையாடும் தெருவிலே
கட்டி வைத்து அடிக்கிறானாம்
யார் மனதும் உருகவில்லை

ஊர் கடிதம் படிக்கையிலே
விம்மி நெஞ்சு வெடிக்குது
போர்ப்புலிகள் பக்கத்திலேயே
போகமனம் துடிக்குது

**பழைய மாணவர்கள் : 17 - 25 அகவை (01/09/2008 இற்கு முன் பிறந்தவர்கள் )**

பாடியவர் : திருநாவுக்கரசர்

பண்: காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்
  பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
  திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
  ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
  வருகஎன்றருள் புரியாயே.

அருளியவர்: சேக்கிழார்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்
ஆனந்த எல்லையில் தனிப்பெருங்கூத்தின்

வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

அல்லது

கிறித்தவப் பாடல்:
எந்தன் உள்ளம் வந்த தேவனே
நன்றியோடு என்றும் பாடுவேன் -2 (2) இறைவா -5
உன்னையன்றி யாரைப் பாடுவேன்
நன்றி மலர் உனக்குச் சூடுவேன்
உன் பாதை நான் செய்யும் பயணங்களில்
தடைகோடி வரும்போது எனைத் தாங்கினாய் (2)
உனைப்போல நான் வாழத் துடிக்கின்ற வேளை -2
கரம் நீட்டி ஒளிகாட்டித் துணையாகிறாய்
அஞ்சாதே நெஞ்சோடு உனில் வாழவே - உன்னையன்றி …
எனைச் சூழ்ந்த இருளெல்லாம் ஒளியாக்கினாய்
அருள் தந்து என் வாழ்வின் வழியாகினாய் (2)
கரைந்தோடும் படகாகத் தவிக்கின்றபோது -2
கலங்கரை விளக்காகச் சுடர்வீசினாய்
உயிராக உணவாக உறவாகவே - உன்னையன்றி.

அல்லது

முகமதியார் பாடல் :

எழுதியவர் :- நாகூர் ஹனிபா

அல்லாவை நாம் தொழுதால்
சுகம் எல்லாமே ஓடி வரும்
அந்த வல்லோனை நினைத்திருந்தால்
நல்ல வாழ்கையும் தேடி வரும்
அல்லாவை நாம் தொழுதால்
சுகம் எல்லாமே ஓடி வரும்
வல்லோனை நினைத்திருந்தால்
நல்ல வாழ்கையும் தேடி வரும்
நல்ல வாழ்கையும் தேடி வரும் (அல்லாவை நாம் தொழுதால்?)

பள்ளிகள் பல இருந்தும்
பாங்கோசை கேட்ட பின்பும்
பள்ளிகள் பல இருந்தும்
பாங்கோசை கேட்ட பின்பும்
பள்ளி செல்ல மனமில்லையோ
படைத்தவன் நினைவில்லையோ
பள்ளி செல்ல மனமில்லையோ
படைத்தவன் நினைவில்லையோ (அல்லாவை நாம் தொழுதால்?)

வழிகாட்ட மறை இருந்தும்
வள்ளல் நபி சொல்லிருந்தும்
வழிகாட்ட மறை இருந்தும்
வள்ளல் நபி சொல்லிருந்தும்
விழிருந்தும் பார்ப்பதில்லையோ


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

செவி இருந்தும் கேட்பதில்லையோ
விழியிருந்தும் பார்ப்பதில்லையோ
செவியிருந்தும் கேட்பதில்லையோ (அல்லாவை நாம் தொழுதால்?)

இறையோனின் ஆணைகளை
இதையத்தில் ஏற்றிடுவோம்
இறையோனின் ஆணைகளை
இதையத்தில் ஏற்றிடுவோம்
இறை தூதர் போதனையை
இகம் எங்கும் பரப்பிடுவோம்
இறை தூதர் போதனையை
இகம் எங்கும் பரப்பிடுவோம் (அல்லாவை நாம் தொழுதால்?)

அல்லது
ஈழத்து கவிதை
எழுதியவர் : நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,
வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.
வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே
குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே
வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

அல்லது

பின்னணி இசை:
பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே

பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே
மழை பொழிந்திடும் கார்த்திகை மாதத்திலே
பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே
மழை பொழிந்திடும் கார்த்திகை மாதத்திலே
மங்களம் தங்கிடும் நேரத்திலே
எம் மன்னவன் பிறந்தான் ஈழத்திலே
மங்களம் தங்கிடும் நேரத்திலே
எம் மன்னவன் பிறந்தான் ஈழத்திலே

பாசத்தில் எங்களின் தாயானான்
கவி பாடிடும் மாபெரும் பேரானான்
பாசத்தில் எங்களின் தாயானான்
கவி பாடிடும் மாபெரும் பேரானான்
தேசத்தில் எங்கணும் நிலையானான்
தேசத்தில் எங்கணும் நிலையானான்
விலை தேடியே வந்திடும் தலையானான் (பொங்கிடும்)

இன்னல்கள் கண்டுமே தான் கொதித்தான்
பல இளைஞரை சேர்த்துமே களம் குதித்தான்
இன்னல்கள் கண்டுமே தான் கொதித்தான்
பல இளைஞரை சேர்த்துமே களம் குதித்தான்
தன்னின மானத்தை தான் மதித்தான்
தன்னின மானத்தை தான் மதித்தான்
பகை தாவியே வந்திட கால் மிதித்தான் (பொங்கிடும்)


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

இங்கொரு தாயகம் மூச்சென்றான்
தமிழ் ஈழமே எங்களின் பேச்சென்றான்
இங்கொரு தாயகம் மூச்சென்றான்
தமிழ் ஈழமே எங்களின் பேச்சென்றான்
வந்திடும் படைகளை வீசென்றன்
வந்திடும் படைகளை வீசென்றன்
புலி வாழ்ந்திடும் வரையினில் தூசென்றான் (பொங்கிடும்)

விடுதலைபுலிகளின் பலமானான்
தமிழ் வீடுகள் யாவிலும் மலரானான்
விடுதலைபுலிகளின் பலமானான்
தமிழ் வீடுகள் யாவிலும் மலரானான்
படுகளம் மீதிலோர் புலியானான்
படுகளம் மீதிலோர் புலியானான்
பிரபாகரன் எங்களின் உயிரானான் (பொங்கிடும்)

என்றுமே எங்களின் தளபதியே
நீ எங்களின் வானத்து வளர்மதியே
என்றுமே எங்களின் தளபதியே
நீ எங்களின் வானத்து வளர்மதியே
இன்று உனக்கு ஆயிரம் சோதனைகள்
இன்று உனக்கு ஆயிரம் சோதனைகள்
தமிழ் ஈழத்தை வாங்குமுன் போதனைகள் (பொங்கிடும்)


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

## வில்லிசை (அகவைக் கட்டுப்பாடு இல்லை)

**1.யாழ்நூலகம்**

தமிழினத்தின் அறிவின் முதிர்ச்சியையும், செழிப்பையும் பறைசாற்றும் பெரும் ஆவணமாக, அறிவாலயமாக விளங்கியது யாழ்நூலகமாகும். இந்நூலகத்தின் தனித்துவத்தை வாழிட தேசப் புதல்வர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில், அதன் ஆரம்பகால நிகழ்வுகள், இதை நிர்மாணிக்க உதவிய மக்களின் அர்ப்பணிப்பு என்பவற்றை எடுத்தியம்புவதோடு, சிங்கள அரச இயந்திரம் இந்நூலகத்தை எரித்ததன் பின்னணியை விளக்குவதாக வில்லிசை அமைதல் வேண்டும்.

**2.துயிலுமில்லங்கள்**

தமிழினம் நடுகல் வழிபாட்டு இனமாகும். தாய் நிலத்தைக் காக்கப் போராடிய வீரமறவர்கள் வீரமரணத்தை அடைந்ததும் அவர்களின் நினைவாக நடுகல் நட்டு வழிபட்டனர்.
இந்நடுகல் வழிபாட்டின் நீட்சியாகவும் தொடர்ச்சியாகவும் தமிழீழத் தேச விடுதலைக்காகத் தம் இன்னுயிரைத் தியாகஞ் செய்த மாவீர மறவர்களின் நினைவாக, தமிழீழத் தேச எல்லைகளுக்குள் பலதரப்பட்ட துயிலுமில்லங்கள் நிர்மாணிக்கப்பட்டு புனிதமாகப் பாராமரிக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.
இத்துயிலுமில்லங்களின் சிறப்பினையும், அப்புனித இல்லங்களின் தற்போதைய நிலமை பற்றியும் வாழிட தேசப் புதல்வர்கள் இலகுவில் புரிந்து கொள்ளும் வகையில் வில்லிசை அமைதல் வேண்டும்.


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

3.**பிள்ளையைத் தேடியலையும் தாய்**

போர்க் காலச் சூழலிலும் சரி, அதன் பின்னரும் பல்வேறுபட்ட காரணங்களுக்காகத் தமிழ் மக்கள் கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இக்கொடிய செயல் கடந்த அறுபது வருடத்திற்கு மேல் நடந்தேறும் மிக மிகத் துன்பியல் சம்பவமாகும். தன் பிள்ளைகள் திரும்பி வருவார்கள் என்ற ஏக்கத்தோடும், கனவோடும் காத்திருந்து, தாழமுடியாமல் அவர்களைத் தேடி அலைந்து மனுக்கொடுக்கும் ஒரு பரிதாப நிலையில் இன்னமும் தமிழீழத் தேசத்து தாய் உள்ளார் என்பதனை வாழிடதேசத்துப் பிள்ளைகள் அறியும் வண்ணம் வில்லிசை அமைதல் வேண்டும்.

4.**பெற்றோரின் கனவுகளில் சிக்கித் தவிக்கும் வாழிடப் புதல்வர்கள்**

பெற்றோரின் கனவுகளுக்கும், ஒப்பிடலுக்கும் இலக்காகித் தமது இளமைக்கால உணர்வைத் தொலைத்து, மேலதிக வகுப்புகளால் மன உளைச்சலுக்கு உள்ளாகி, விழிபிதுங்கி நிற்கும் எமது எதிர்காலத் தலைமுறையினரையும் அவர்களது பெற்றோரையும், வாழ்தலின் இரகசியத்தையும் அதன் மகத்துவத்தையும் விளக்குவதாக வில்லிசை அமைதல் வேண்டும்.

5.**வாழிடதேசம் நமதில்லை**

வாழிடதேசமான புலம்பெயர் தேசத்தில் பிறந்து வளர்ந்து, நல்ல பொருளாதாரக் கட்டமைப்போடும், அதிசிறந்த அறிவோடும் மற்றும் சட்டத்தின் படி இவ்வாழிடதேச மக்களாக வாழ்ந்தாலும், நாம் இந்நாட்டின் மக்களல்ல, நமக்கான நாடு இன்னமும் கைகூடவில்லை என்பதை விளக்கி, அந்நாட்டை அடையும் வழிகளில் பயணஞ் செய்யும் ஊக்க சக்தியாக இவ்வில்லிசை அமைதல் வேண்டும்.

**6.விழுப்புண் கொண்ட தமிழீழம்**

2009 வைகாசி மாதம் வரை தமிழினத்துக்கான நாடாக சகல துறைசார் வளங்களோடும் தமிழீழம் எனும் நாடு செழிப்போடும் வனப்போடும் இருந்தது. அந்நாடு 2009 காலப்பகுதியில் பன்னாட்டு அரசுகளின் சதியாலும், அதிபயங்கர நாசகாரச் செயலாலும் காயப்பட்டு, அதன் மக்கள் படுகொலை செய்யப்பட்டு, அந்நாட்டின் இறைமை மற்றும் கட்டமைப்பு சிதைக்கப்பட்டு இன்றைய நிலையில் விழுப்புண் சுமந்து நிற்கின்றது. இவ்விடயங்களையும் உள்ளடக்கி, இனிவரும் காலத்தில் இந்நாட்டை மீளக் கட்டியெழுப்ப எவ்வாறான வினைத்திறன் மிக்க செயலைச் செய்யவேண்டும் என்பதை உள்ளடக்கியதாக இவ்வில்லிசை அமைதல் வேண்டும்.